RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21136

OPEN ACCESS

# கலித்தொகை காட்டும் வாழ்வியல் கூறுகள்

**கோ. வசந்திமாலா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பூ சா கோ கலை அறிவியல் கல்லூரி, பீளமேடு கோவை, இந்தியா

# Elements of life that show the Kalithokai

**G. Vasanthimala [a, *]**

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore - 14, India.

* Corresponding Author: drvasanthimala06@gmail.com

Received : 02-12-2020
Accepted : 15-01-2021

Check for updates

**ABSTRACT**

The ancient Tamils lived in groups during the Stone Age. They expressed their feelings through gestures. Later, with the change of time, they developed and exchanged their thoughts through sounds. With the development of knowledge, they expressed their ideas through literature. As a result, the social background and life ethics of the Tamil people who lived thousands of years ago can be understood through Sangam literature. The purpose of this research article is to study the cultural elements and living environment that the learned and learned in these Sangam literatures convey.

**Keywords:** Kalithokai, Stone Age, Social, Sangam literature

## முன்னுரை

பண்டைய தமிழர் கற்காலத்தில் கூட்டமாக சேர்ந்து வாழ்ந்தனர். தன்னுடைய உணர்வுகளைச் சைகைகளின் மூலமாக அறிவித்து வந்தனர். பின்னர் கால மாற்றத்தால் வளர்ச்சியடைந்து ஒலிகள் மூலமாகத் தனது எண்ணங்களைப் பரிமாறிக்கொண்டனர். அறிவின் வளர்ச்சியால் தனது கருத்துக்களை இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தினர். இதன் விளைவாக ஈராயிம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் சமூகப்பின்னணியையும் வாழ்க்கை நெறிமுறைகளையும் சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. இச்சங்க இலக்கியங்களில் கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை உணர்த்தும் பண்பாட்டுக் கூறுகளையும் வாழ்வியல் சூழலையும் ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## கலித்தொகையும் பழந்தமிழர் பண்பாடும்

“கற்றறிந்தோர் ஏத்தும் கலி” என்கின்ற சிறப்புக்குற்குரியது. கலித்தொகை. இது 150 பாடல்களை உடையது. இதனைத் தொல்காப்பியம்,

“கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும்என்மனார்புலவர்” (தொல்காப்பியர்.தொலகாப்பியம்;.பொருள்.56)

என்று காதற்பாடல்களைப் பாடுவதற்கு பயன்படுத்தப் பட்டதாகக் கலியையும், பரிபாடலையும் குறிப்படக் காண முடிகின்றது. இதனை ஐவர் பாடியுள்ளனர். பழந்தமிழர் பண்பாட்டையும், வாழ்வியலையும் உயர்த்திக்காட்டிக் கூறுகிறது கலித்தொகை.

## கடவுள் வழிபாடு

அச்சத்தின் காரணமாக இயற்கைப் பொருள்களை வணங்க முற்பட்ட பழந்தமிழர்கள் பின்னர் ஐவகை நிலதெய்வங்களையும் வகைப்படுத்தி வணங்கத் தொடங்கினர். இதன் தொடர்ச்சியாக இன்றும் நாம் தெய்வங்களை வணங்கி எந்தவொரு செயலையும் மேற்கொள்ளுவது குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும். குறிஞ்சி நில மகளிர் மலையை வணங்கிய குறிப்பினைக் கலித்தொகை

"கோடிச்சியர் கூப்பி வரை தொழு கை போல்" (கலி.40-11)

ஏன்று குறிப்பிடக் காணலாம்.

மேலும் மூன்றடியால் உலககையளந்த திருமாலைப் பற்றியும் திருமாலின் வணக்கத்தைப் பற்றியும் கலித்தொகையானது

"ஞாலம் மூன்று அடித்தாய முதல்வன்" (கலி.124-1)

என்று குறிப்பிடுகிறது.

மேலும் ஞாயிற்றுக்குப் பல பெயர்களைக் குறிப்பிடுவதால் அக்கால மக்கள்

ஞாயிற்றை வணங்கிய செய்தியினைப் பெற முடிகின்றது.

சான்று

"ஒண்சுடர் ஞாயிறு" (கலி.121-17)

"பகுதி அம செல்வம்" (கலி.262)

கனலி" (கலி.612)

"சுடர்" (கலி.1001)

"மை ஆறு மணடிலும்" (கலி.14112)

இவ்வாறெல்லாம் சுட்டுவதனைக் கொண்டு அறியலாகின்றது.

எனவே இயற்கை வழிபாடு என்பது இறைவழிபாடாகப் போற்றப்படும் உன்னத கருத்து கலித்தொகை கொண்டு உணரமுடிகின்றது.

## அகப்பண்பாட்டு மரபுக் கூறுகள்

பண்டைய தமிழர்கள் வாழ்வினை அகமென்றும் புறமென்றும் பாகுபடுத்தினர். இதில் அகவாழ்விலும் வீரம் நிறைந்தவர்களாகக் காணப்படடனர். இத்தகைய அகமரபுக்கூறுகளில் ஏறுதழுவுதல் ஒரு கூறாகும். இதனைக் குறித்து கலித்தொகையின் முல்லைக்கலி பல்வேறு செய்திகளைத் தருகின்றுது. ஏறுதழுவுதல் என்பது ஆயர்களின் மணவினைச் சடங்குகளில் ஒன்றாகும். இதனை கலித்தொகை "ஏறுகோளீ"; என்கிறது. இதனையே இன்று மங்சுவிரட்டு, ஜல்லிக்கட்டு என அழைக்கினறனர். மேலும் ஆயர்கள்

இவ்விளையாட்டு குறித்துப் பறையறைதலும்இ குரவையாடுதலும் நிகழ்ந்திமை பெறப்படுகிறது.

சான்று

“அவ்வழிப் பறையெழுந்திசைப்பப்........

நுறைவலங் செயவிடா இறுத்தன ஏறு” (கலி.104:29-31)

என்ற வரி பறையறைதல் குறித்தும்,

“குரவை தழீஇயாம் மரபுளி பாடித்

தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்” (கலி.101:39-42)

என்ற பாடல் அடி குரவையாடுதலையும் குறிப்பிட உணரலாம்.

இதன் வழி அகவாழ்விலும் வீரம் போற்றிய பழந்தமிழரின் கொள்கை போற்றிய வாழ்வியல் உணர்த்தப்படுகிறது.

## அகமரபு நம்பிக்கைகள்

நம்பிக்கை பற்றிய பல்வேறு கூறுகளை இலக்கியங்களில் சுட்டக் காணலாம். இதில் தலைவனைப்; பிரிந்த தலைவி தலைவன் வருவானா என்று அறிய கையால் மணலில்; கோலமிட்டு சுழிவரைந்து மனதில் எண்ணிய நிலையில் கூடலிழைத்தல் என்ற அகமரபு நம்பிக்கையானது கலித்தொகையில் கூறப்படுகிறது. இதனைக் “கூடற்சுழி” என அழைப்பர்.

இதனைக் கலித்தொகை,

“கோடுவாய் கூடாப் பிறையைப் ரிதொன்று

நாடுவேன் கண்டனென் சிற்றிலும் கண்டாங்கே” (கலி.142:24-25)

என்று சுட்ட அறியலாம்.

மேலும் அகமரபு நம்பிக்கைகளில் ஒன்று திருமணத்திற்குப் பெண் கேட்டுச் செல்லுதலும், அவ்வாறு செல்லும் பொழுது நல்ல நாள் பார்த்துச் செல்லுதலும் உண்டு என்கின்ற பண்பாடு கலித்தொகையில்;

“நன்னாள் தலைவரு மெல்லை நகர்மலைத்

தந்நாண் தாந் தாங்குவா தென்னோற்றனர் கொல்” (கலி.39:32-33)

என்ற அடிகள் கொண்டு அறியமுடிகின்றது.

திருமணமுறைகளில் பண்பாட்டுக் கூறுகள்

சங்ககாலத் திருமணம் சாதி, மத, இன வேறுபாடுகள் அற்ற திருமணமாகவே இருந்துள்ளது. சமூக வாழ்க்கை;யில் அமைதியையும், ஒழுங்கையும் ஏற்படுத்துவதற்காகக் கணவன் மனைவியாக வாழ விருபும் ஆணும், பெண்ணும் பலர் அறியத் திருமணச் சடங்கை பழந்தமிழர் ஏற்படத்தினர் என்று தொல்காப்பியம் கூறுகின்றது இதனை,

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப” (தொல்காப்பியர்.தொலகாப்பியம்: கற்பியல் -4)

என்னும் நூற்பா விளக்குகிறது.

ஒரு பெண் ஆடவண்பால் அன்புடையவளாக இருப்பதனை அறிந்தால் அது தெய்வத்தின் செயல் என்று கருதி அவள் விரும்பியவனுக்கே மணம் முடித்தனர் என்ற செய்தியினை கலித்தொகை சுட்டுகிறது. இதனை,

“தெய்வமால் காட்டிற்று இவட்க்கு என நின்னைஅப்

பொய்இல் பொதுவற்கு அடைசூந்தார் தந்தையொடு

ஐயன்மார் எல்லாம் ஒழுங்கு” (கலி : 107 :34)

என்பதனைக்கொண்டு அறியலாம். இதனைத் தொல்காப்பியம்,

“கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கோளற்டகுரி மரபிற் கிழவன் கழதை;தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே”

((தொல்காப்பியர். தொலகாப்பியம.; : கற்பியல் -140)

என்று குறிப்பிடுதல் ஒப்பிடத்தக்கது.

இதன் மூலம் நல்ல காரியங்களை நல்ல நாளில் தொடங்கும் நம்பிக்கையும் ஒரு பெண்ணின் உணர்வுக்கு மதிப்பளிக்கும் சிறந்த நனிநாகரீகமும் பெறப்படுகிறது.

## திருமணமுறைகளில் பண்பாடுக் கூறுகள்

திருமணமுறைகளில் பண்பாட்டினை உடையவர்களாக விளங்கினர் பண்டைய தமிழர்கள் என்பதனைத் திருமண செய்வதற்கு முனனர்; ஒரு நல்ல நாளினைத் தேர்வு செய்யும் வழக்கம் இருந்தனை கலித்தொகை வாயிலாக உணரமுடிகின்றது. இதனைஇ

“நேறி அறி செறி குறி புரி திரிவு அறியா

ஆறிவனை முந்துறீஇ” (கலி :39-46)

என்னும் அடியினால் அறியமுடிகின்றது.

திருமணம் பெண் வீட்டில் வைத்து நடைபெற்றது என்பதனை,

“வரைப்பில் மணல் தாழ்ப்பெய்து திரைப்பில்

வதுவையும் ஈங்கே அயர்ப” (கலி : 115:19-20)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றது.

இதன் வழி பெண்வீட்டார் மனமுவந்து கொடுக்கப் பெண்ணை ஏற்றுக்கொண்டனர் என்ற உயர்ந்த மனித நாகரிகமானது பெறப்படுகிறது.

## திருமண நிகழ்வுக் கூறுகள்

திருமணத்தை நிகழ்த்துவதில் பழந்தமிழர் நாகரிகங்களைப் பின்பற்றினர். திருமணம் நடைபெறும் இல்லத்தினை அழகுபடுத்தினர் என்ற கருத்தினைக் கலித்தொகையானது பதிவு செய்கின்றது. இதனை,

"தருமணல் தாழப்பெய்து இல்பூவில் ஊட்டி

எருமைப் பெடையோடு எமர் ஈங்கு அயரும்" (கலி : 114 :12-13)

என்ற அடிகள் கூறுகின்றது.

இன்றும் திருமணம் நிகழும் வீடுகள் அலங்கரிகப்படுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

திருமணத்தின் மற்றொரு பழக்கவழக்கம் தீயினை வலவருதல் என்கின்ற இன்றைய நடைமுறையானது சங்க காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வரும் மிகச்சிறந்த பண்பாடு மற்றும் பழக்கவழக்கம் என்பதனை,

"ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல்" (கலி : 69-5)

என்ற அடி உணர்த்துகின்றது.

## விருந்தோம்பலும் தமிழர்பண்பாடும்

தமக்கென வாழாது பிறர்க்கென வாழ முயலுதலும் அமுதமே கிடைப்பினும் தான் உண்ணாது பிறருடன் கலந்து உண்ணுவதே உயர்ந்த பண்பாடு. என்பதனை வள்ளுவர்,

"இருந்தொம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு" (திருவள்ளுவர். திருக்குறள் : குறள் :எண் :81)

என்று குறிப்பிடுகிறார்.

இத்தகைய உயர்ந்த பண்பாடுகள் எளியோரிடத்து இனிமையாகப் பேசுவதும் புதிதாக வந்த விருந்தினருக்கு விருந்தளிப்பதும் இயனறவரைப் பிறருக்கு உதவும் கொள்கையும் மானமும் கெடின் உயிரை விடுவதும் பண்டைத் தமிழரின் பண்பாடு என்றுக் கூறலாம். முகம் தெரியாத ஒருவனின் பசிக்கு உணவளிக்கும் போது அவன் சிறந்த பண்பாளன் ஆகிறான். அத்தகைய பண்பாளனின் பழக்கத்தை,

"விரியுளைக் கலிமான் தேரோடு வந்து

விருந்தெதிர் கோடலின் மறப்பல்" (கலி : 75 : 16-17)

என்ற அடிகள் சுட்டுகிறது.

மேலும் தமிழரின் உணவுப் பழக்கவழக்கத்தில் இருந்த உணவுப்பொருட்களை

"மாங்காய் நறுங்காடி கூட்டுவேம் யாங்கு" (கலி : 109 -23)

என்று கூறுவதன் மூலம் தமிழரின் உணவுப் பழக்கவழக்கத்தில் பருப்பும் அன்னமும் பாயாசமும் பலவிதக்காய்கறிகள், மாங்காய் ஊறுகாய், சாம்பார், இரசமுடன் விருந்து செய்தனர் என்ற செய்தியானது பெற முடிகின்றது.

எனவே புதிதாக வரும் விருந்தினருக்கு சிறந்தமுறையில் உணவு படைக்கும் பண்பாடு சங்க காலம் தொட்டு இன்றைய காலம் வரை பின்பற்றுவதற்க்கு பழந்திழரே மரபு தந்துள்ளார்கள் என்கிற அகச்சான்றாய் கலித்தொகையானது அமைகின்றது.

## அறம் போற்றும் பண்பு

அறம் என்பது ஒழுக்கநெறியாகும். அறம் என்னும் சொலுக்கு ஒழுக்கம் வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம் சமயம் என்றெல்லாம் பொருள் கூறப்படுகிறது. பண்டைய தமிழர் அக வாழ்வில் அறத்தோடு பொருந்திய இல்லற வாழ்வினை மேற்கொண்டனர். ஓர் ஆடையைப் பிரித்து உடுத்தி வாழும் நிலையிலும் மனம் ஒன்றி வாழும் ஒத்த அன்புள்ளம் உடைய வாழ்க்கையே வாழ்க்கை என்பதனை,

“ஓரோ ஓகை தம்முள் தழீஇ ஓரோ ஓகை

ஓன்றின் கூறாடை உடுப்பவரே ஆயினும்

ஓன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை” (கலி : 9 : 23-24)

என்ற பாடல் அடிகளால் அறியமுடிகின்றது.

மேலும் விலங்கினங்களின் வாழ்வினைக் கொண்டு மனித இனத்திற்கு அன்பு நிலையை உணர்த்தும் நோக்கமும் இதில் காண முடிகின்றது. வெம்மை காரணமாகப் பெண்மானுக்கு ஆண்மான் தன் நிழலைக் கொடுத்து உயிரையே விடும் அன்பு போற்றுதற்குரியதாகும். இத்தகு காட்சிகள் நிறைந்தது பாலை நிலம் என்பதனை,

அன்பு கொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை

எமன்சிறகால் ஆற்றும் புறவு” (கலி : 11)

என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன.

இதன் வழி மனிதம் அன்பு போற்றி வாழ பழந்தமிழ் மரபு வழிகாட்டி அமைவது பெற முடிகிறது

## பழந்தமிழரின் ஈதல் பண்பாடு

ஈதல் சிறந்த பண்பாடு என்பதனை நம் முன்னோர்கள் அறிதிருந்தனர். ஈவோர் சுpறந்து வாழ்வார்கள் என்பதும் ஈயாதோர் புகழ்பட வாழாமையும் அகச்சான்றுகள் வழி உணர முடிகின்றது. இதனையே வள்ளுவம் ஒருவன் முயன்று பெற்ற செல்வம் எல்லாம் தக்கவர்க்கு உதவி செய்யும் பொருட்டு என்று திருக்குறளில்

“தாளாற்றி தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு

வேளாண்மை செய்தற் பொருட்டு” (திருவள்ளுவர். திருக்குறள் : குறள் எண் : 212)

என்று பதிவுசெய்யக் காணலாம்.

இத்தகைய ஈதல் பற்றியும் ஈயாமையின் இளிவு பற்றியும் கலித்தொகையானது

“தொலைவு ஆகி அரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இளிவு” (கலி : 2 :11)

“இல் என இரந்தோர்க்கு ஒன்றும் ஈயாமை இளிவு” (கலி : 2 :15)

**“இடன் இன்றிஇ;ரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இளிவு” (கலி : 2 :19)**

**என்று குறிப்பிடுவதன் முலம் ஈகை என்பது தம்pர்களின் மிகச்சிறந்த பண்பாடாகவும் உயர் தனி நாகரீகமாகவும் விளங்கியது என்ற உயர்ந்த நோக்கமும் பெறமுடிகின்றது. மேலும் ஈதல் குணம் இல்லாதவனின் இயல்பை மிகவும் இளிந்த நிலையாகக் கூறுகின்றது கலித்தொகை. இத்தகைய இளிந்த நிலையை வள்ளுவர் திருக்குறளில்,**

**“சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**

**ஈதல் இயையாக் கடை” (திருவள்ளுவர். திருக்குறள் : குறள் : எண் : 230)**

**என்று பதிவு செய்கின்றார்.**

**அதாவது சாதலை விடக் கொடியது ஒருமனிதனுக்கு வேறு எதுவுமிருக்க முடியாது. ஆனால் அதுவும் கூட இனிது வறியவருக்கு ஒன்று ஈயாமல் வாழ்வது என்கிறார். எனவே தான் கலித்தொகை ஈயாமல் வாழ்வதை மிக இளிவாகச்சுட்டுகிறது.**

## முடிவுரை

**இவ்வாயவுக் கட்டுரையின் வழி பழந்தமிழரின் பண்பாட்டுக் கூறுகள் இன்றைய நடைமுறை வாழ்விலும் பின்பற்றப்பட்டு வருவதும் அகவாழ்விலும் வீரமும் அறமும் ஒழுங்கும் திருமணமுறையில் பெண்ணுரிமையும் ஈயாதாரின் இளிவும் புதியவர்களுக்கு விருந்துசெய்யும் உயரிய பண்பும் ஆகிய இனனோரன்ன மரபுகளும் பெறப்பட்டது.**

## References

A. Manickam, (2007) Thiruvalluvar. Thirukkural Explanation.

Ilampooranar (1986) Tholkappiyam, Porulathikaram, Kalaga veliyedu

Manickanar, (2006) Sangam Literature, Source and Text, Varthamanan Publishing House, Chennai

Tholkappiyar (1989) Tholkappiyam. Kalaga veliyedu

Varadarasanar. M., (2017) Thirukkural.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License